சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

<u>பு.சா.1குணசேகரன் த /பெ குடியன் , வயது 57.</u>

**<u>குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.-</u>**

3. முதல் விசாரணையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் எதிரிக்கு எத்தனை வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் எனக்கு நியாபகம் இல்லை. எதிரியின் வீட்டிற்கும் வேலை செய்யும் அலுவலகத்திற்கும் நான் சட்ட அறிவிப்பு அனுப்பினேன். எந்த சட்ட அறிவிப்பின் அடிப்படையில் காலவரையறை காட்டி நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எதிரியின் வீட்டிற்கு அனுப்பிய சட்ட அறிவிப்பை வைத்து தாக்கல் செய்துள்ளேன். நான் எதிரியின் வீட்டிற்கு அனுப்பிய சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டார். மேற்படி விவரத்தை தான் எனது முதல் விசாரணையிலும் தெரிவித்துள்ளேன். நான் கூறுவது போல் எதிரி சட்ட அறிவிப்பை பெறவில்லை என்றால் சரியல்ல. அவர் சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டார். எதிரி எங்கு வைத்து பணம் கேட்டார் என்றால் என் வீட்டில் வைத்து பணம் கேட்டார். மாத வட்டிக்காக நான் எதிரிக்கு பணம் கொடுத்தேனா என்றால் எதிரி கேட்டுக்கொண்டதன் பேரில் சூழற்சிக்காக ஒரு மாதத்திற்கு மட்டும் பணம் கொடுத்தேன். ஆனால் வட்டிக்கு கொடுக்கவில்லை.

4. பணம் பெற்ற பின்பு சுமார் 1 1/2 மாதம் கழித்து எதிரி இவ்வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார். நான் 30.08.2021 அன்று நான் கணக்கு வைத்திருக்கும் இந்தியன் வங்கி ஜோலார்பேட்டை கிளையில் காசோலையை தாக்கல் செய்தேன். 09.09.2021 அன்று நான் செலுத்திய காசோலை திருப்பப்பட்டது. 06.10.2021 அன்று நான் எதிரிக்கு சட்ட அறிவிப்பு அனுப்பினேன். நான் கூறுவது போல் 30.08.2021 அன்று காசோலையை வங்கியில்

செலுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு கொடுக்கவேண்டிய பணத்தை ஏற்கனவே திரும்ப செலுத்திவிட்டார் என்றாலும், மாறாக நான் தான் எதிரியிடம் பெற்ற காசோலையை திரும்ப அவருக்கு கொடுக்காமல் மோசடியாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு போதிய வருமானம் இருப்பதால் அவர் என்னிடம் கடன் பெறவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இலலை.**